## இராஜபாளையம் நகராட்சி

**29.06.2018**

திருவள்ளுவர் ஆண்டு 2047 விளம்பி வருடம் ஆனி மாதம் 15ம் தேதி 2018ம் வருடம் ஜீன் மாதம் 29ம் தேதி வெள்ளிக்கிழமை இந்நகராட்சியின் பி.எஸ்.குமாரசாமி ராஜா நினைவுக் கூட்ட மண்டபத்தில் மாலை 04.00 மணிக்கு இந்நகர்மன்றத்தின் சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்

**வருகை– திரு.க.அச்சையா, எம்.எஸ்.சி.,எம்.பில்.,தனி அலுவலர்**

1. இந்நகராட்சி வார்டு எண்.14, தம்பாபிள்ளை தெருவில் குடியிருக்கும் கீழ்கண்ட விவரப்படியானவைகளில் வரிசை எண். 2 முதல் 8வரை கண்ட நபர்களும், மேலும் இந்நகர் வார்டு எண்.22, காமராஜ் நகர் தெரு, வரிசை எண்.1ல் கண்ட நபரும் சொத்துவரி உயர்வினை எதிர்த்து, இந்நகராட்சி மீது ஸ்ரீவில்லிபுத்தூர், மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளனர். இவ்வழக்குகள் கீழ்கண்டவாறு வாய்தா ஏற்பட்டுள்ளது. இவ்வழக்குகளை நகராட்சி வழக்கறிஞர் திரு.கே.காளிதாஸ்,எம்.ஏ.,பி.எல்., அவர்கள் ஆஜராகி நடத்திடவும், மேலும் கீழ்கண்ட வழக்குகளின் செலவுத்தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2444/2018/எ2)

<u>ஸ்ரீவில்லிபுத்தூர், மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் சொத்துவரி உயர்வு தொடர்பாக தொடர்ந்த வழக்குகள் விவரம்.</u>

| வ. | | வழக்கு எண் | வாய்தா நாள் |
|---|---|---|---|
| 1 | திரு.எஸ்.என்.பாஸ்கர ராஜா | I.A. No.331, OS No.91/18. நாள்.5.4.18. | நாள். 8.6.2018 |
| 2 | திரு.முருகேசன் | I.A. No.372, OS No.108/18. நாள்.19.4.18. | நாள்.20.6.2018. |
| 3 | திரு. இராஜாமுருகன் | I.A. No.373, OS No.109/18. நாள்.19.4.18. | நாள்.20.6.2018. |
| 4 | திரு.ராமசாமி | I.A. No.413, OS No.121/18. நாள்.24.4.18. | நாள்.27.6.2018. |
| 5 | திரு.வைத்திலிங்கம் | I.A. No.416, OS No.124/18. நாள்.24.4.18. | நாள்.27.6.2018. |
| 6 | திருமதி.திருமலையம்மாள் | I.A. No.417, OS No.125/18. நாள்.19.4.18. | நாள்.27.6.2018. |
| 7 | திரு.பொன்னுச்சாமி | I.A. No.414, OS No.122/18. நாள்.25.4.18. | நாள்.27.6.2018. |
| 8 | திரு. பாலசுப்பிரமணியன் | I.A. No.415, OS No.123/18. நாள்.19.4.18. | நாள்.27.6.2018. |

அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.546அனுமதிக்கப்பட்டது.**

2. இந்நகராட்சி ஒப்பந்தக்காரர் திரு.ஏ.சி.வேலாயுதராஜா என்பவருக்கு 2013.2014 ம் வருடத்தில் SWD என்ற பணிக்காக அடுத்து செய்த பணிகளுக்கு தனக்கு வழங்கிட வேண்டிய 1 % டிபாசிட் தொகை ரூ 51,867/– ஐ காலம் கடந்த வைப்பு தொகை பதிவேட்டின் படி வழங்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் (இ1/2794/17)

| ப.எண் | வ.எண் | தொகை |
|---|---|---|
| 86 | 154 | 1000.00 |
| 86 | 155 | 2000.00 |
| 86 | 169 | 10517.00 |
| 87 | 203 | 900.00 |
| 87 | 215 | 2250.00 |
| 87 | 218 | 980.00 |
| 89 | 269 | 7500.00 |
| 89 | 287 | 8500.00 |
| 91 | 333 | 1000.00 |
| 91 | 348 | 10500.00 |
| 91 | 349 | 2300.00 |
| 91 | 350 | 420.00 |
| | | **51867.00** |

அ.கு

1. அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.547அனுமதிக்கப்பட்டது.**

3. இந்நகராட்சி ஒப்பந்தக்காரர் திரு.சோலைமலை பெருமாள் என்பவருக்கு மாடசாமி கோவில் ரோடு வார்டு எண் 9 ல் கழிப்பறை கட்டுதல் பணி 2013.2014 ம் வருடத்திற்குரியது ஆகும். மேற்படி பணி முடிவுற்றபடியால் அன்னாருக்கு 2013.2014 காலங்கடந்த வைப்பு தொகை பதிவேட்டின் படி ரூ8000/–(எட்டாயிரம் மட்டும் வழங்க) வழங்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் (இ1/705/17)

| ப.எண் | வ.எண் | தொகை |
|---|---|---|
| 90 | 299 | 4000/- |
| 91 | 326 | 4000/- |

அ.கு

1. அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.548அனுமதிக்கப்பட்டது.**

4. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட மதுரை–தென்காசி நெடுஞ்சாலையில் செவல்பட்டி தெரு சந்திப்பு முதல் பி.எஸ்.கே.பார்க் வரையிலும் பி.ஏ.சி.ஆர் சாலை ஆனந்த் தியேட்டர் மேற்கு பகுதியிலும் அவ்வப்போது ஏற்படும் விபத்துகளை தடுக்க குறுக்கு தெருக்களில் வேகத்தடை அமைக்கும் பணி மேற்கொள்ளவும் , அதற்கான மதிப்பீடு தொகை ரூ.2.40 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி மன்ற தீர்மான எண் 473 நாள் 28.03.2018 அனுமதிக்கப்பட்டுள்ளது.அதன் அடிப்படையில் 20.04.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளியினை மன்றத்தின் பார்வைக்கு(இ1/1722/2018)

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிக்காரரின் பெயர் | மதிப்பீடு தொகை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.சி.குழைந்த வேலு | மதிப்பீடு தொகை –0.14% குறைவு |
| 2 | திரு.ஏ.சி.வேலாயுதராஜா | மதிப்பீடு தொகை 1.48% அதிகம் |

அ.கு

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தங்களில் மதிப்பீட்டு தொகையை விட –0.14% சதவீதம் குறைவாக குடுத்துள்ள ஒப்பந்தகாரர் திரு.சி.குழைந்தவேலு என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மானம் எண்.549அனுமதிக்கப்பட்டது.**

5. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் உள்ள TN67A2 9290 டம்பர் பிளேசர் வாகனத்திற்கு பழுது பணிகள் பார்க்கும் பொருட்டு கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (எச்1/1090A/2018)

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1 | சுதர்சனம் மோட்டார்ஸ்<br>273, புகழேந்தி ரோடு<br>இராஜபாளையம் | ரூ.98,300/– |
| 2 | மீனா மோட்டார்ஸ்<br>7/112, அம்பேத்கார் நகர்<br>இராஜபாளையம் | ரூ.97,200/– |

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. குறைந்த ஒப்பந்தப்புள்ளி குடுத்துள்ள மீனா மோட்டார்ஸ் ஒர்க்ஸ் நிறுவனத்தாருக்கு வேலை உத்திரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.550அனுமதிக்கப்பட்டது.**

**6.** இராஜபாளையம் நகராட்சி பொறியியல் பிரிவு குடிநீர் டேங்கர் லாரி டி.சி.எம்.7189 வாகனத்திற்கு தகுதி சான்றிதழ் பெறும் பொருட்டு பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.40,240/– (ரூபாய் நாற்பதாயிரத்து இருநூாற்றி நாற்பது)ற்கு மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(இ2/1199/2018)

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்கு ஆகும் செலவுத் தொகையினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்
3. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.551அனுமதிக்கப்பட்டது.**

**7.** இராஜபாளையம் நகராட்சி 2018–2019 ம் ஆண்டிற்கு ஒப்பந்ததாரர்கள் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட வருமான வரியை நான்கு காலாண்டிற்கு TDS தாக்கல் செய்வதற்கும், மற்றும் நகராட்சி பணியாளர்களிடம் பிடித்தம் செய்த வருமான வரியை சார்ட்டடு அக்கவுண்ட் மூலம் தாக்கல் செய்வதற்கும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.10,000/– (ரூபாய் பத்து ஆயிரம் மட்டும்) வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.(9041/2000/பி4)

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.552அனுமதிக்கப்பட்டது.**

**8.** இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் 42 வார்டுகளிலும் டெங்கு மற்றும் கொசுஒழிப்பு பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு தினக்கூலி பணியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள்.அனைத்து பணியாளர்களும் மாவட்ட ஆட்சியர் 04.07.2017 ம் தேதிய கடித எண்.a7/13764/2017ல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தொகையினை வழங்கக்கோரியுள்ளார்கள்.

எனவே மேற்படியார்களுக்கு மாவட்ட ஆட்சியரின் 04.07.2017 ம் தேதியிட்ட கடித எண்.a7/13764/2017 ன் படி தினக்கூலி துப்புரவு பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ 182/— என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தொகை ரூ 182/— என நாள் ஒன்றுக்கு 01.07.2018 முதல் தொடர்ச்சியாக ஊதியம் வழங்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(எச்1/3481/18)

அ.கு—

1. மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.553அனுமதிக்கப்பட்டது.**

**9.** இராஜபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் .22 காமராஜர் நகர் கதவு எண்.101 அருகில் உள்ள முழுமையாக பட்டுப்போன வேப்பமரத்தினை பொது ஏலத்தில் விட்டு அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(இ2/3484/2018)

அ.கு—

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெற்று ஏலம் விட நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.554அனுமதிக்கப்பட்டது.**

**10.** இராஜபாளையம் நகராட்சி வார்டு எண் .26 டி.பி.மில்ஸ் ரோடு பேருந்து நிறுத்தம் அருகில் உள்ள முழுமையாக பட்டுப்போன வாகைமரத்தினை பொது ஏலத்தில் விட்டு அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(இ2/3485/2018)

அ.கு—

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெற்று ஏலம் விட நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.555அனுமதிக்கப்பட்டது.**

**11.** இராஜபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 1. வார்டு எண் — 42 வடக்கு ஆண்டாள்புரம் கதவு எண்—965 வீட்டின் அருகில் பலத்த காற்றின் போது கீழே சாய்ந்து விழுந்த வேப்பமரம் ,

2. சங்கரபாண்டியபுரம் தெரு , துரைச்சாமிபுரம் தெரு, சிவகாமிபுரம் தெரு , தோப்புபட்டித்தெரு , தெற்கு வைத்தியநாதபுரம் தெரு ஆகிய பகுதிகளில் இடையூராக உள்ள வெட்டப்பட்ட மரக்கிளைகள்,

3. முடங்கியார் ரோடு நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் பூங்காவில் உள்ள

1.புங்கைமரம் (சத்துணவு மையம் முன்புறம்)

2. புங்கைமரம் (சத்துணவு மையம் மேற்குபுரம்)

3. வாகை மரம் – 3 எண்ணம்

4. அசோக மரம் –2 எண்ணம்

மேற்கண்ட முழுமையாக காய்ந்து போன மரங்கள் 20.06.2018 அன்று பொது ஏலம் விடப்பட்டது.அதில் கேட்கப்பட்ட ஏலக்கேள்விகள் வருமாறு (இ2/1879/2017)

| வ.எண் | ஏலதாரர் பெயர் | ஏலக்கேள்வி விலை விகிதம் (கேட்கப்பட்ட அதிகபட்ச ஏலக்கேள்வித்தொகை) |
|---|---|---|
| 1 | திரு.பி.ராதாகிருஷ்ணன்<br>172 , சம்மந்தபுரம் தெரு, இராஜபாளையம். | ரூ.4150/– |
| 2 | திரு.எஸ்.பாலகிருஷ்ணன்<br>13–B, திரௌபதியம்மன் கோவில் தெரு, இராஜபாளையம். | ரூ.4000/– |

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது ஏலத்தில் கேட்கப்பட்ட அதிகபட்ச ஏலக்கேள்வி கேட்டுள்ள திரு.பி.ராதாகிருஷ்ணன் என்பவரின் ஏலக்கேள்வியினை ஏற்கலாம்.
3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.556அனுமதிக்கப்பட்டது.**

**12.** இராஜபாளையம் நகராட்சி வார்டு எண்.03 கீழ ஆவரம்பட்டி வார்டு எண்.31 குருசாமி கோவில் தெரு வார்டு எண்.30 ஆனந்த் தியேட்டர் தெரு வார்டு எண்.30 தோப்புபட்டி தெரு ஆகிய பகுதிகளில் உள்ள மினி Mini OHT ன் HDPE Tank பழுதடைந்துள்ளதை மாற்றி புதிய HDPE Tank அமைப்பதற்கு ரூ.49,000/–க்கு மட்டும் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.பாலமுருகன் என்பவர் மூலம் மதிப்பீட்டு விகிதத்தில் ஒப்படைப்பு செய்து பணி மேற்கொள்ளவும் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. (இ2/2018)

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்படி பணிக்காகும் செலவுத் தொகையினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.557அனுமதிக்கப்பட்டது.**

**13.** இராஜபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 14 வது வார்டு வள்ளலார் தெரு பொது விநியோக கடை கட்டிடத்தில் சிறு மின் விசை பம்பிற்கான இன்டெக்ஸ் தொட்டி புதிதாக அமைக்கவும், நியாய விலைக்கடைக்கு புதிதாக மின் இணைப்பு பெறும் பணி மேற்கொள்ளவும் அதற்காகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.25,000/–ற்கு (ரூபாய் இருபத்தைற்தாயிரம்) மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

இப்பணியின் அவசர அவசியம் கருதி இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.எஸ்.வி.சத்தியநாராயணன் என்பவர் மூலம் மதிப்பீட்டு விகிதத்தில் ஒப்படைப்பு செய்து பணி மேற்கொள்ளவும் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. (இ2/2018)

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்காகும் செலவுத் தொகையினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.558அனுமதிக்கப்பட்டது.**

**14.** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் தலைவர் மற்றும் முதன்மை செயலாளர் அவர்களின் 26.12.2017 ஆய்வு கூட்ட நடவடிக்கைகள் NULM திட்டத்தின் கீழ் இராஜபாளையம் அரசு மகப்பேறு மருத்துவமனை வளாகத்தில் (Special Shelter) சிறப்பு தங்குமிடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கியதின் பேரில் இந்நகர்மன்றம் தீர்மான எண் 428 நாள் 12.02.2018 ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. அதனை தொடர்ந்து 10.04.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு முடிவுக்கு (இ1/1117/2018)

| வரிசை எண் | ஒப்பந்தபுள்ளியாளரின் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.பா.முத்துகுமாரசாமி<br>No.35 அயோத்திராம் நகர்,<br>60 அடி ரோடு,<br>மாடசாமி கோவில் தெரு,<br>இராஜபாளையம். | ரூ.36,91,002.60<br>0.04% மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | திரு.நசிர்<br>1a 2/19 காயித்தே மில்லத் 1வது தெரு,<br>சங்கரன் கோவில் | ரூ.38,76,975.25<br>5% மதிப்பீட்டை விட அதிகம் |

அ.கு–

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.பா.முத்துகுமாரசாமி என்பவர் குறைந்த ஒப்பந்தப்புள்ளி ரேட்டாக ரூ.36,91,002.60 மதிப்பீட்டை விட 0.04% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.
3. கூடுதல் செலவினத்தையும் நகராட்சி பொது நிதியில் இருந்து ஏற்கலாம்.

**தீர்மானம் எண்.559அனுமதிக்கப்பட்டது.**

**15.** இந்நகராட்சி பகுதியில் உள்ள 42 வார்டுகளிலும் சேகரமாகும் குப்பைகளை மக்கும் மற்றும் மக்காத குப்பைகளாக ஆய்வு செய்யும் பொருட்டு கோயம்புத்தூர் Green link analytical and research laboratory private limited நிறுவனத்திற்கு வழங்கும் பொருட்டு உத்தேச செலவுத்தொகை 23,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(எச்1/3482/2018)

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. Green link analytical and research laboratory private limited, Coimbatore நிறுவனத்திற்கு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.560அனுமதிக்கப்பட்டது.**

**16.** இந்நகராட்சியில் மின் கம்பி உதவியாளராக பணிபுரிந்து வயது முதிர்வு காரணமாக 30.09.2016 அன்று ஓய்வு பெற்ற திரு.த.பொன்னுச்சாமி என்பவர் தனது நியமனம், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசாணை எண் 125 நாள் 27.05.1999–ன்படி நியமனம் செய்யப்பட்டதாகவும் எனவே அதற்குரிய பணப்பயன்கள் வழங்குமாறு சென்னை உயர் நீதி மன்றம் மதுரை கிளையில் வழக்கு எண் 3308/2012 WP (MD) நாள் 17.02.2012 அன்று வழக்கு தொடர்ந்துள்ளார், அதன் அடிப்படையில் சென்னை உயர் நீதி மன்றம் மதுரை கிளை 19.02.2018 அன்று திரு.த.பொன்னுச்சாமி மின் கம்பி உதவியாளர் மேற்படி அரசாணைப்படி நியமனம் செய்யப்பட்டு இருந்தால் அதற்குரிய பணப் பயன்கள் சட்டத்திற்கு உட்பட்டு வழங்குமாறு நீதி பேராணை வழங்கி உள்ளது. அவ்வாறு வழங்கப்பட்ட நீதி பேராணைக்கு உரிய பதில் வழங்க நகராட்சி வழக்கறிஞர் திரு.K.காளிதாஸ் அவர்களிடம் சட்டக்கருத்து கோரப்பட்டது. மேற்படி வழக்கறிஞரின் சட்ட கருத்துரு வழங்கியமைக்கு கட்டணம் ரூ.2500/– (ரூபாய் இரண்டு ஆயிரத்தி ஐநூறு மட்டும்) வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (இ2/1959/2018)

<u>அலுவலக குறிப்பு</u>

1. பொது நிதியில் இருந்து வழக்கறிஞர் கட்டணம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.561அனுமதிக்கப்பட்டது.**

**17.** திரு.C.பாஸ்கரன் ஒப்பந்தக்காரர் 09.01.2015 அன்று இந்நகராட்சிக்குட்பட்ட மலையடிப்பட்டி தெருவில் பேவர் பிளாக் மற்றும் சிறுபாலம் கட்டும் பணிக்கு எடுத்து செய்யப்பட்ட வேலைக்கு டெண்டர் டிபாசிட் தொகையாக 1% ரூ20500/– ஐ வழங்குமாறு கோரி உள்ளார்.மேற்படியார் கோரும் தொகை காலங்கடந்த வைப்பு தொகை பதிவேடு ப.எண்.94 , வ.எண்.133 ல் ரூ20500/– உள்ளது.(ரசீது எண்.1409229).மேற்படி தொகையினை வழங்கலாம்.(இ1/416/2018)

அ.கு–

1.அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.562அனுமதிக்கப்பட்டது.**

**18.** இராஜபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.41 சுதர்ஸன் கார்டன் 4–வது தெருவில் உள்ள சுமார் 25' அடி நீளம் கொண்ட வாகைமரம் பலத்த காற்றின் போது கீழே விழுந்து விட்டது.அவற்றினை பொது ஏலத்தில் விட்டு அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(இ2/2018)

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெற்று பொது ஏலம் நடைபெற்றதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.563அனுமதிக்கப்பட்டது.**

**19**. 1920 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம்பிரிவு 124(னு) 13ன் கீழ் தொழில்வரி விகிதத்தை 01.10.2018 முதல் 35ரூசதவீதம் உயர்வு செய்ய தனி அலுவலரின் 24.05.2018ம் தேதிய 509எண் தீர்மானத்தில் முடிவு செய்துள்ளதை தினமணி நாளிதழில் 26.05.2018 அன்று பொதுமக்களின் தகவலுக்காக விளம்பரம் செய்து ஆட்சேபனை ஏதும் இருப்பின் தெரிவிக்க முப்பதுநாட்கள் அவகாசம் அளித்து விளம்பரம் செய்யப்பட்டது. ஆட்சேபனையே அல்லது ஆலோசனையோ ஏதும் பெறப்படவில்லை. எனவே 24.05.2018ம் தேதிய தனிஅலுவலரின் தீர்மானம்எண்509ஐ உறுதிசெய்து மாவட்ட அரசிதழில் வெளியிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(4180/2018/அ6)

அகு :

1. அனுமதிக்கலாம்.
2. மாவட்ட அரசிதழில் வெளியிட ஆகும் செலவுத்தொகைக்கும் மன்ற அனுமதி அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.564அனுமதிக்கப்பட்டது.**

**20.** இந்நகராட்சி வார்டு எண்.14, தம்பாபிள்ளை தெருவில் குடியிருக்கும் திருமதி.உமா, க/பெ.பழனிவிநாயகம், என்பவர் ஸ்ரீவில்லிபுத்தூர், மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு எண்.**I.A. No.447, OS No.133/2018.** நாள்.**19.4.18**.ன் படி (வாய்தா நாள்.**9.7.2018**) சொத்துவரி உயர்வினை எதிர்த்து, இந்நகராட்சி மீது வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்கினை நகராட்சி வழக்கறிஞர் திரு.கே.காளிதாஸ்,எம்.ஏ.,பி.எல்., அவர்கள் ஆஜராகி நடத்திடவும், மேலும் இவ்வழக்கிற்கான செலவுத்தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.3403/2018/எ2)

அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.565அனுமதிக்கப்பட்டது.**

**21.** இந்நகராட்சி பழைய பேருந்து நிலையத்தில் உள்ள கட்டணக்கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 30.06.2018 ல் முடிவடைவதால் 1.7.2018 முதல் 30.06.2021 வரை மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமத்தை பொது ஏலம் /ஒப்பந்தப்புள்ளி 27.6.2018 ல் கோரப்பட்டதில் மேற்படி தேதியில் ஏலத்தில் கலந்து கொள்ள ஒருவரும் வரவில்லை . ஒப்பந்தப்புள்ளி மட்டும் இரண்டு வரப்பெற்றுள்ளது.(அ1/947/15)

| வரிசை எண் | ஒப்பந்ததாரர் பெயர் | சென்ற குத்தகை தொகை | ஒப்பந்தப்புள்ளி தொகை (ஓராண்டிற்கு) |
|---|---|---|---|
| 1 | கோ.தேவராஜ் த/பெ.கோவிந்தசாமி 53 தொப்பை கணபதி நாடார் தெரு மம்சாபுரம் | 9,75,713 | 10,25,000– (பத்து லட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும்) |
| 2 | து.ஆதி த/பெ.துரைராஜ் 357, திருவள்ளுவர் தெரு இராஜபாளையம். | – | 9,00,000– (ஒன்பது லட்சம் மட்டும்) |

மேற்கண்ட விவரப்படிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. கோ.தேவராஜ் என்பவர் கூடுதல் ஏலக்கேள்வியாக ரூ10,25,000/– க்கு மூன்றாண்டு சராசரி தொகை ரூ9,29,988/–ம் முந்தைய ஆண்டு குத்தகை தொகை ரூ9,75,713/– விடவும் 5% கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி கேட்டுள்ளார்.

திரு. கோ.தேவராஜ் என்பவரது உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகையை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு—

1. மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.566அனுமதிக்கப்பட்டது.**

**22.** இந்நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் உள்ள வடபுறம் (ம) தென்புறம் உள்ள ஆண்கள் (ம) பெண்கள் கட்டணக்கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 31.07.2018 ல் முடிவடைவதால் 1.8.2018 முதல் 31.07.2021 வரை மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமத்தை பொது ஏலம் /ஒப்பந்தப்புள்ளி 27.6.2018 ல் கோரப்பட்டதில் மேற்படி தேதியில் ஏலத்தில் கலந்து கொள்ள ஒருவரும் வரவில்லை . ஒப்பந்தப்புள்ளி மட்டும் இரண்டு வரப்பெற்றுள்ளது.(அ1/947/15)

| வரிசை எண் | ஒப்பந்ததாரர் பெயர் | சென்ற குத்தகை தொகை | ஒப்பந்தப்புள்ளி தொகை (ஓராண்டிற்கு) |
|---|---|---|---|
| 1 | ந.இளங்கோவன்<br>த/பெ.நடராஜன்<br>பண்ணைப்பட்டி<br>உசிலம்பட்டி (போஸ்ட்)<br>மதுரை மாவட்டம். | 4,92,928 | 5,18,000<br>(ரூபாய் ஐந்து லட்சத்து பதினெட்டாயிரம் மட்டும்) |
| 2 | தே.வாசுமலை<br>த/பெ.தேவசாமி<br>14/4 கருக்கட்டான் பட்டி<br>உசிலம்பட்டி (போஸ்ட்)<br>மதுரை மாவட்டம். | — | 4,00,000<br>(ரூபாய் நான்கு லட்சம் மட்டும்) |

மேற்கண்ட விவரப்படிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.ந.இளங்கோவன் என்பவர் கூடுதல் ஏலக்கேள்வியாக ரூ5,18,000/— க்கு மூன்றாண்டு சராசரி தொகை ரூ4,69,827/—ம் முந்தைய ஆண்டு குத்தகை தொகை ரூ4,92,928/— விடவும் 5% கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி கேட்டுள்ளார்.

திரு.ந.இளங்கோவன் என்பவரது உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகையை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு—

1. மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.567அனுமதிக்கப்பட்டது.**

**23.** இந்நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் தலைச்சுமையாக தட்டில் வைத்து பால்கோவா,முறுக்கு,அதிரசம், விற்பனை செய்யும் உரிமம் **31.3.2015** ல் முடிவடைந்து விட்டது.கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக ஏலம் கோரியும் ஏலம் கோர எவரும் முன்வரவில்லை.ஆதலால் **27.6.2018** ல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமத்தை பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மேற்படி தேதியில் ஏலத்தில் கலந்து கொள்ள ஒருவரும் வரவில்லை . ஒப்பந்தப்புள்ளி மட்டும் இரண்டு வரப்பெற்றுள்ளது.(அ1/947/15)

| வரிசை எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை (ஓராண்டிற்கு) |
|---|---|---|
| 1 | ஜெ.உஷாராணி<br>159, கூரைப்பிள்ளையார் கோவில் தெரு<br>இராஜபாளையம். | **63,000**<br>(ரூபாய் அறுபத்தி மூன்றாயிரம் மட்டும்) |
| 2 | ச.நவநீதன்<br>344, திருவனந்தபுரம் கிருஷ்ணமராஜா தெரு<br>இராஜபாளையம். | **53,000**<br>(ரூபாய் ஐம்பத்தி மூன்றாயிரம் மட்டும்) |

மேற்கண்ட விவரப்படிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி.ஜெ.உஷாராணிஎன்பவர் கூடுதல் ஏலக்கேள்வியாக ரூ63,000/— க்கு கேட்டுள்ளார்.

கடந்த 31.3.2015 முதல் ஏலம் போகவில்லை.31.3.2015 க்கு முன்பு ரூ1,20,000/— ஏலம் போன பின்பு கடந்த மூன்று ஆண்டுகளாக பலமுறை ஏலம் கோரியும் ஏலம் கோர எவரும் முன்வரவில்லை.இனியும் நிதி இழப்பினை தவிர்க்கும் பொருட்டு ரூ63,000/— க்கு உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஜெ.உஷாராணி என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு—

1. மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.568அனுமதிக்கப்பட்டது.**

24. அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 3.7.2017 ன் படி 9 ஆண்டுகள் குத்தகை முடிவடைந்த நகராட்சிக்கு சொந்தமான கடைகள் மற்றும் காலியிடங்களை மறுநிர்ணயம் செய்து குத்தகைதாரர்கள் அதனை ஒப்புக்கொள்ளாத பட்சத்தில் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோர அரசாணையில் தெரிவிக்கப்பட்டு 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு வாடகை மறு நிர்ணயம் செய்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் ந.க.எண்.1066/2015/அ4 நாள் 28.3.2017 ன் படி நிர்ணயிக்கப்பட்ட குழுவின் படி மறு நிர்ணயம் வாடகையினை கடை குத்தகை ஏல உரிமையாளர்கள் ஒப்புக்கொள்ளததால் 27.6.2018 அன்று பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி

கோரப்பட்டதில் கீழ்க்கண்ட கடைகள் மட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. (அ1/947/15)

| வ.எண் | கடையின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரியவரின் பெயர் முகவரி | பழைய வாடகை | குழு நிர்ணயம் செய்த வாடகை | 27.6.18 அன்று வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி கோரிய விவரம் |
|---|---|---|---|---|---|
| 1 | பழைய பேருந்து நிலைய டிவி அறை | க.மகேஸ்வரன் 265,பெரியகடை பஜார் இராஜபாளையம் | 1513 | 12000 | 12,025 |
| 2 | பழைய பேருந்து நிலைய பெட்டி கடை | L.விஜயலட்சுமி 11/359Z1, வ.உ.சி.நகர் சமுசிகாபுரம் | 800 | 10,000 | 10,100 |

மேற்கானும் கடைகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு–

வரிசை எண் 1 மற்றும் 2 உள்ள கடைகள் பழைய வாடகையினை காட்டிலும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களால் குழுநிர்ணயிக்கப்பட்ட மறுநிர்ணயம் வாடகையை காட்டிலும் கூடுதலாக உள்ளதால் 1.8.2018 முதல் 31.7.2021 வரை மூன்றாண்டுகளுக்கு (9 ஆண்டு வரை மட்டும்) உரிமம் புதுப்பிக்கப்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை குத்தகை தொகை 15 சதவீதம் வாடகையை விட உயர்வு செய்து உரிமம் வழங்கலாம்.

**தீர்மானம் எண்.569அனுமதிக்கப்பட்டது.**

**25.** இந்நகராட்சி;ககு சொந்தமான புதிய பேருந்து நிலைய கடை எண் 10A க்கு பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி 27.06.2018ல் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விவரப்படியான நபர்கள் மட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்துள்ளனர் ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. (அ1/947/15)

| வரிசை எண் | ஒப்பந்ததாரர் பெயர் | முந்தைய வாடகை | ஊயர்த்தப்பட்ட வாடகை தொகை |
|---|---|---|---|
| 1 | அ.மனோகரன் த/பெ.அழகர்சாமி, 54/403, ஸ்ரீரெங்கபாளையம், இராஜபாளையம் | 7275 | 8730 (ரூபாய் எட்டாயிரத்து எழுநூற்று முப்பது மட்டும்) |
| 2 | த.தமிழ்க்குமரன் த/பெ.தங்கையா, | – | 8000 (ரூபாய் எட்டாயிரம் |

| | | | |
|---|---|---|---|
| | 176/8A கணபதி செட்டியார் தெரு, சுந்தரநாச்சியார்புரம் | | மட்டும்) |

மேற்படி புதிய பேருந்து நிலைய கடை எண். 10A க்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.அ.மனோகரன் என்பவர் கூடுதல் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.8730/– (ரூபாய் எட்டாயிரத்து எழுநூற்று முப்பது மட்டும்) ஏற்கனவே உள்ள மாத வாடகையை விட கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார்.

திரு.அ.மனோகரன் என்பவரது உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகையை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.570அனுமதிக்கப்பட்டது.**

26. இராஜபாளையம் நகராட்சி பொறியியல் பிரிவு வாகனம் டி.சி.எம்.7189 வாகனத்தின் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வாகனத்தில் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 14.06.2018 அன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம்.(இ2/1199/2018)

| வரிசை எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | M/s.வேல்முருகன் மோட்டார் ஒர்க்ஸ், 272எ, புகழேந்தி ரோடு இராஜபாளையம் | ரூ.43,385/– |
| 2 | M/s.ஸ்ரீராம் மோட்டார் ஒர்க்ஸ், 354,முடங்கியார் ரோடு, சுந்தரநாச்சியார்புரம் | ரூ.40,240/– |

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் மற்றதை விட குறைந்த விலை விகிதம் ரூ.40,240/– மட்டும் கொடுத்துள்ள M/s.ஸ்ரீராம் மோட்டார் ஒர்க்ஸ் நிறுவனத்தாரின் விலைப்புள்ளியினை ஏற்க்கலாம்.

**தீர்மானம் எண்.571அனுமதிக்கப்பட்டது.**

27. இந்நகராட்சிக்கு பாத்தியப்பட்ட முடங்கியார் ரோட்டில் அமைந்துள்ள 6 எண்ணம் கொண்ட கடைகள் அமைந்துள்ள (சர்வே எண்கள் வார்டு C பிளாக் 20 சர்வே எண்கள் 52/1 to 6) .கட்டிடம் மிகவும் சேதாரமாகி உள்ள நிலையில் அதன் ஸ்தர தன்மை ஆய்வு

செய்து அறிக்கை சமர்பிக்குமாறு மாவட்ட ஆட்சியர் விருதுநகர் அவர்கள் அலுவலகத்தில் பதிவு பெற்ற தகுதிவாய்ந்த தனியாள் அட்டவணை பொறியாளர் வகுப்பு 1a விடம் கோரப்பட்டது.மேற்படி பொறியாளர் தனது 26.06.2018 தேதிய அறிக்கையில் மேற்படி சர்வே எண்கள் அமைந்துள்ள கட்டிடம் மிகவும் சேதாரமாகி உள்ளது எனவும் , பயன்பாட்டிற்கு அற்றதாக உள்ளது எனவும் , விபத்து ஏதும் ஏற்படும் முன் கட்டிடம் முழுவது இடிக்கப்பட வேண்டுமெனவும் அறிக்கை சமர்பித்துள்ளார்.அன்னாரின் அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் , மேற்படி கட்டிடத்தை முழுமையாக இடிக்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.(இ1/5237/2017)

அ.கு–

1. கட்டிடம் முழுமையாக சேதாரமாகி உள்ள காரணத்தால் முழுமையாக அப்புறப்படுத்த மன்றம் அனுமதிக்கலாம்.

2.செலவின தொகையை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

3.பொறியாளருக்கு கட்டணமும் மன்ற அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.572அனுமதிக்கப்பட்டது.**

**28.** இராஜபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்க்கண்ட இடங்களில் உள்ள சிறு விசை மின் பம்புகளுக்கான ஆழ்துளை கிணறுகளில் மண்சரிந்து வேர்பிடிப்புகளால் பழுதடைந்த மின் மோட்டார்களை வெளியே எடுக்க இயலவில்லை.(இ2/3737/2018)

1.வார்டு எண் 8 கோட்டை தலைவாசல் தெரு,
2.வார்டு எண் 4 மணி மேகலை தெரு
3.வார்டு எண் 26 துரைச்சாமிபுரம் சாவடி அருகில்
4.வார்டு எண் 28 லட்சுமியாபுரம் துரைச்சாமிபுரம் சந்திப்பு
5.வார்டு எண் 39 ஐ.என்.டி.யூ.சி. நகர்
6.வார்டு எண் 31 அம்பலப்புளி பஜார், குருசாமி கோவில் ஓடை அருகில்
7.வார்டு எண் 42 பொன்னகரம் Store அருகில்
8.நகராட்சி உரக்கிடங்கு Single Phage
9.வார்டு எண் 7 தர்மராஜா பெரிய தெரு,
10.வார்டு எண் 30 தெற்கு வைத்தியநாதபுரம் காட்டு தெரு,

மேற்கண்ட இடங்களில் உள்ள ஆழ்துளை கிணறு மோட்டார்களை lift make Tractor கொண்டு வெளியே எடுக்கும் பணி மேற்கொள்ளவும் அதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.127000/–(ரூபாய் ஒரு லட்சத்து இருபத்தி ஏழு ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

அ) அனுமதிக்கலாம்

ஆ) மேற்படி பணிக்கு ஆகும் செலவுத் தொகையினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.573அனுமதிக்கப்பட்டது.**

**29.** இராஜபாளையம் நகராட்சியில் கணிணி பிரிவு மற்றும் மாடசாமி கோவில் தெரு வரிவசூல் மையம் ஆகியவற்றில் இயங்கி வற்த 2 எண்ணம் split ac மற்றும் 1 எண்ணம் window ac பழுதாகி இயங்காமல் உள்ளது. நகராட்சி கணிணி அறையில் இயங்கி வரும் சர்வர் மற்றும் network கருவிகளுக்கு Ac பயன்பாடு மிக முக்கியமாதலால் Ac களில் ஏற்பட்டுள்ள out door fan motor , capacitor , chemical wash service , ac , shifting and refitting , new remote gas changing ஆகிய பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ 15,000/– (ரூபாய் பதினைந்தாயிரம்) ற்கு மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(இ2/2018)

அ.கு–

1.அனுமதிக்கலாம்.

2.மேற்படி பணிக்கு ஆகும் செலவுத்தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.574அனுமதிக்கப்பட்டது.**

**30.** இந்நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளில் நாள்தோறும் சேகரம் ஆகும் கழிவுகளை செயலாக்கம் செய்ய (Processing) மேற்கொள்ள கீழ்க்கண்ட உள்ளடக்கிய விரிவான திட்ட அறிக்கையினை உரிய நிதி மான்யமாக ரூ 832.80 லட்சம் ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்க வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை.05 அவர்களுக்கு அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (இ1/2711/2018)

–

| I | நுண் உரம் செயலாக்கம் மையம் அமைத்தல் | |
|---|---|---|
| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூபாய் லட்சத்தில் |
| 1 | மங்காபுரம், நகராட்சி பழைய மாட்டுக்கொட்டத்தில் 5.00 மெட்ரிக் டன் திறனுடைய நுண் உரம் செயலாக்கம் மையம் அமைத்தல் பணி மேற்கொள்ள | ரூ 80.00 |
| 2 | ஸ்ரீரெங்கபாளையம் 5.00 மெட்ரிக் டன் திறனுடைய நுண் உரம் செயலாக்க மையம் அமைக்கும் பணி மேற்கொள்ள | ரூ 80.00 |
| 3 | வார்டு எண் 40 PACR சாலையில் 5 மெட்ரிக் டன் திறனுடைய நுண் உரம் செயலாக்க மையம் அமைக்கும் பணி மேற்கொள்ள | ரூ 80.00 |
| 4 | மாடசாமி கோவில் ரோடு 60 அடி குறுக்கு சாலையில் 2.00 மெட்ரிக் டன் நுண் உரம் செயலாக்கம் மையம் அமைக்கும் பணி மேற்கொள்ள | ரூ 34.00 |
| 5 | நகராட்சி அலுவலகம் பின்புறம் 2 மெட்ரிக் டன் திறனுடைய நுண் உரம் செயலாக்க மையம் அமைக்கும் பணி | ரூ 34.00 |

| | | |
|---|---|---|
| | மேற்கொள்ள | |
| | மொத்தம் | ரூ308.00 |
| II | உயிரி சுரங்கம் அமைத்தல்–<br><br>நகராட்சி உரக்கிடங்கில் குப்பை கழிவுகளை முழுமையாக அகற்ற உயிரி சுரங்கம் ( Bio Mining) அமைக்க | ரூ440.00 |
| III | நுண் உர செயலாக்க மையங்களுக்கு தேவையான வாகனங்கள் வாங்குதல்–<br><br>நுண் உர செயலாக்கத்து வாகனத்தை வாங்க | ரூ 84.80 |
| | **மொத்தம்** | **ரூ 832.80** |

அ.கு–

மேற்கண்ட இடங்களில் நுண்உரம் செயலாக்கம் மையம் அமைக்கவும் , உயிரி சுரங்கம் அமைக்கவும் மற்றும் மேற்படி திட்டத்திற்கு தேவையான வாகனங்கள் வாங்கவும் , அதற்கான நிதி ஒதுக்கீடு ரூ 832.80 லட்சம் மான்யமாக வழங்கவும் , நிர்வாக அனுமதி வேண்டியும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை.05 அவர்களுக்கு விரிவான திட்ட அறிக்கை அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.575அனுமதிக்கப்பட்டது.**

31. இந்நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் நிர்மாணயம் மதிப்பீடு ரூ 249.66 கோடிக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை எண் 5 (MA2) நாள் 22.01.2018 அனுமதிக்கப்பட்டுள்ளது. திட்டம் ஆண்டு இயக்குதல் மற்றும் பராமரிப்பு செலவினம் சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளை மேற்கொள்ள பட வேண்டும். மேற்படி திட்டம் இயக்குதல் மற்றும் பராமரிப்பு செலவினத்தை நகராட்சியில் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் , ஆசிய வளர்ச்சி வங்கி திட்டம் முடிவடைந்த பின்னர் 10 ஆண்டுகளுக்கு சுத்திகரிப்பு நிலையம் மற்றும் கழிவு சேகரம் அமைப்புகளை ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்தகாரர்களால் இயக்குதல் மற்றும் பராமரிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் என கருத்து தெரிவிக்கப்பட்டதால் அதற்கான கழிவறை திட்டம் II க்கான ஒப்பந்தப்புள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் எனவே உரிய சம்மதக்கடிதம் வழங்குமாறு நிர்வாக பொறியாளர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் திட்டம் , திட்டம் உருவாக்கம் கோட்டம் திருநெல்வேலி அவர்கள் அலுவலக கடிதம் எண் 404–1/f. இராஜபாளையம் UGSS/JD01/2018/ நாள் 1.06.2018–ன் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எணவே திட்டம் முடிவடைந்த பின்னர் திட்டத்திற்கான அடிப்படை ஆண்டு முதர் (Base Year) 2020 முதல் 2029 வரை பத்தாண்டுகளுக்கு கீழ்க்கண்ட விவரப்படி திட்டம் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியினை திட்டம் III ல் ஒப்பந்தப்புள்ளி நமுனா மற்றும் பட்டியல் அளவு (BOR) குறிப்பின் படி ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளவும் , அதற்கான செலவினத்தை நகராட்சி நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.(இ1/1965/2018)

| வ.எண் | விவரம் | செலவினதொகை(லட்சத்தில்) |
|---|---|---|
| 1. | 2020 முதல் 2029 வரை பத்தாண்டுகளுக்கு சுத்திகரிப்பு நிலையம் இயக்குதல் மற்றும் பராமரிப்பு செலவினம் | ரூ 1185.02 |
| 2. | 2020 முதல் 2029 வரை பத்தாண்டுகளுக்கு கழிவு நீர் சேகர அமைப்பிற்கு (collection system) இயக்குதல் மற்றும் பராமரிப்பு செலவினம் | ரூ 4203.66 |
| | மொத்தம் | ரூ 5388.68 |

அ.கு—

1. மேற்படி திட்டம் நகராட்சிக்கு பயன்பாடாக உள்ளது என்பதாலும் மேற்படி திட்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் திருநெல்வேலி சம்மதம் கடிதம் அனுப்பவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.576அனுமதிக்கப்பட்டது.**

32. இராஜபாளையம் நகராட்சி பகுதிகளில் உள்ள தெருவிளக்குகளை பராமரிப்பு செய்யும் பணி தனியார் மூலம் மேற்கொள்ள மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு Accord advertising agencies நிறுவனத்தார் மூலம் கீழ்க்கண்ட நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டது(இ2/3641/2017)

| | | |
|---|---|---|
| தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் தமிழ்நாடு | = | ரூ.48750 |
| தினமணி – தமிழ்நாடு | = | ரூ.37500 |
| | | ரூ.86250 |
| CGST 2.5% | | **2156.25** |
| **SGST 2.5%** | | **2156.25** |
| மொத்தம் | = | **90563.00** |

ரூ . 90,563/— மட்டும் (ரூபாய் தொண்ணுறாயிரத்து ஐநூற்றி அறுபத்தி மூன்று மட்டும்) M/s Accord advertising agencies நிறுவனத்தார்க்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு—

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்காகும் செலவுத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**தீர்மானம் எண்.577அனுமதிக்கப்பட்டது.**

33. இராஜபாளையம் நகராட்சி வார்டு 1 முதல் 42 வார்டு வரையிலான தெருவிளக்குகள் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கான ஒப்பந்தகாலம் 30.06.2018 அன்றுடன் முடிவடைகிறது.இந்நிலையில் இப்பணிக்கான புதிய ஒப்பந்தத்திற்கு 27.06.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு தொழில் நுட்ப ஒப்பந்த உறை திறக்கப்பட்டுள்ளது.ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்து மன்ற அனுமதி பெற்று புதிய வேலை உத்தரவு வழங்கும் வரை இப்பணியினை 01.07.2018 முதல் தொடர வேண்டியது அவசியமாகிறது. எனவே அவசர அவசியம் கருதி பணியின் முக்கியத்துவம் கருதி ஏற்கனவே நடைமுறையில் இருந்த ஒப்பந்தத்தை 01.07.2018 முதல் ஒரு மாத காலத்திற்கு மட்டும் அல்லது புதிய வேலை உத்தரவு வழங்கும் வரை இதில் எது முந்திகிறதோ அதுவரை மேற்கொள்ளவும் அதற்கான செலவினம் ரூ 4,89,085/– ( ரூபாய் நான்கு லட்சத்தி எண்பத்தொன்பதாயிரத்து எண்பத்தைந்து ) ற்கு மட்டும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.(இ2/3964/2012)

அ.கு–

1.அனுமதிக்கலாம்.

2.மேற்படி பணிக்கு ஆகும் செலவுத்தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.578அனுமதிக்கப்பட்டது.**

34. இந்நகராட்சியில் அம்ருத்திட்டத்தின் கீழ் தாமிரபரணி கூட்டு குடிநீர் திட்டம் நடைபெற்று வருகிறது. மேற்படி திட்டப்பணிக்கு மேல்நிலைதொட்டி கட்டும் பணியும் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட காமராஜ் நகர் மேல்நிலைதொட்டி வளாகத்திலும் , ஜவகர் மைதானம் கழிப்பறை உள்ள இடத்திலும் மேல்நிலைதொட்டி கட்ட அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் உள்ள R.C.C கூரையுடன் உள்ள பழைய கட்டிடங்களை டிரிலிங் இயந்திரம் கொண்டு அப்புறப்படுத்தவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ 30,000/– (ரூபாய் முப்பதாயிரம்) மட்டும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.(இ1/2018)

அ.கு–

1.அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.579அனுமதிக்கப்பட்டது.**

35. இராஜபாளையம் நகராட்சி பொறியியல் பிரிவு ஈப்பு வாகனம் டி.என். 67A X7545 வாகனத்தில் கீழ்க்கண்ட பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஆகும். உத்தேச செலவின தொகை ரூ 42,860/– (ரூபாய் நாற்பத்திரண்டாயிரத்து எண்ணூற்றி அறுபது ) ற்கு மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(இ2/3571/2018)

பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் விபரம்–

1. என்ஜின் ஆயில் புதியது மாற்றி ஆயில் பில்டர், டீசல் பில்டர், ஏர் பில்டர் புதியது மாற்றுதல்.
2. கிரௌன் ஆயில் , கியர் ஆயில் புதியது மாற்றுதல்.
3. 4 எண்ணம் வீல் ஜாயிண்ட் , அப்பர் ஆர்ம்ஸ் புஸ் புதியது மாற்றுதல்.
4. சென்டர் ஜாயிண்ட் , ஸ்டார் டீத் யோக் அசெம்பிளி புதியது மாற்றுதல்.

5. என்ஜின் செட் ரப்பர் புஷ் & கியர் பாக்ஸ் செட் ரப்பர் புஷ் புதியது மாற்றுதல்.
6. கியர் பாக்ஸ் ஆயில் லீக் சரி செய்தல்.
7. 4 எண்ணம் வீல் கிரீஸ் பேக்கிங் செய்து பழுது பேரிங்ஸ் புதியது மாற்றுதல்.
8. முன் பகுதி வீல் பிரேக் போர்டு புதியது மாற்றுதல், பின்பகுதி வீல் பிரேக் லைனிங் அடித்து செக்கப் செய்தல்.
9. கியர் ராடு புஷ் புதியது மாற்றுதல்.
10. 2 எண்ணம் கூடுதலாக லைட் புதியது மாட்டுதல்.
11. 2 எண்ணம் வைப்பர் பிளேடு புதியது மாற்றுதல்.
12. வீல் பேலன்ஸ் ராடு புஷ் 2 எண்ணம் புதியது மாற்றுதல்.
13. கம்ப்ளீட் வாட்டர் சர்வீஸ் செய்து வீல் அலொய்மெண்ட் செக்கப்செய்தல்.
14. ஸ்பீடா மீட்டர் பழுது பணிகள் சரி செய்தல்.

அ.கு–

1.அனுமதிக்கலாம்.

2.மேற்படி பணிக்கு ஆகும் செலவுத்தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.580அனுமதிக்கப்பட்டது.**

36. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 10 வது வார்டு சோமையாபுரம் தெருவில் பழுதடைந்த வடிகால் பழுது நீக்கம் செய்து மூடி சிலாபு கொண்டு மூடவும் அதற்கான மதிப்பீடு தொகை ரூ45,000/– (ரூபாய் நாற்பத்தி ஐந்தாயிரம்) மட்டும் நிர்வாக அனுமதியும் , மேற்படி பணியினை நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்தப்காரர் திரு.சி.பாஸ்கரன் என்பவர் மூலம் மதிப்பீடு விகிதத்தில் இப்பணியினை செய்து முடிக்க ஒப்படைப்பு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.(இ1/3876/2018)

அ.கு–

1. மதிப்பீடு விகிதத்தில் அப்பணியினை செய்து முடிக்க நகராட்சி ஒப்பந்தகாரர் திரு.சி.பாஸ்கரன் என்பவர் மூலம் அப்பணியினை ஒப்படைப்பு செய்ய மன்ற அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணிக்கு செலவினம் தொகை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.581அனுமதிக்கப்பட்டது.**

37. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 11வது வார்டு சீதக்காதி தெருவில் பழுதடைந்த குடிநீர் வால்வு தொட்டிகள் மற்றும் வடிகால் பழுதுநீக்கம் செய்து பராமரிக்கவும் அதற்கான மதிப்பீடு தொகை ரூ47,000 (ரூபாய் நாற்பத்தி ஏழாயிரம்) மட்டும் நிர்வாக அனுமதியும் , மேற்படி பணியினை நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர் திரு.A.P.முத்துகிருஷ்ணராஜா என்பவர் மூலம் அப்பணியினை மதிப்பீடு விகிதத்தில் செய்து முடிக்க ஒப்படைப்பு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.(இ1//2018)

அ.கு—

1. மதிப்பீடு தொகையில் அப்பணியினை செய்து முடிக்க நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்தகாரர் திரு.A.P.முத்துகிருஷ்ணராஜா என்பவர் மூலம் ஒப்படைப்பு செய்ய மன்ற அனுமதிக்கலாம்.

2. மேற்பணியினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.582அனுமதிக்கப்பட்டது.**

ஓம்.க.அச்சையா
தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்
இராஜபாளையம் நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையாளர்(கூ.பொ)
இராஜபாளையம் நகராட்சி